Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 102 | வியாழக்கிழமை Thursday | 12.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# ஆட்சியில் பங்கு தமிழ்நாட்டுக்கு ஒத்துவராது

## முதலமைச்சர் ஸ்டாலின் திட்டவட்டம்



"மத்திய பாஜக அரசு தமிழகத்துக்கு பட்ஜெட்டில் தந்தது ஜீரோ தான். இப்போது, என்டிஏ கூட்டணிக்கு அதே ஜீரோவை மக்களும் திருப்பித் தர போகிறார்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் ஊழல் கறை படிந்த அத்தனை பேரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு, பொய்களை பரப்பிகொண்டு, தேர்தலை சந்திக்க வருகிறார்கள்" என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்தியா டுடே சார்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில், "தமிழ்நாட்டு மக்களின் மனதில் என்ன இருக்கிறது என்று இந்தியா டுடே-வும் சி-வோட்டர்ஸ் நிறுவனமும் நடத்திய சர்வேயில் திமுக கூட்டணி 45 சதவீதம் ஆதரவோடு லீடிங்கில் இருக்கிறது.

எங்களுக்கும், இரண்டாம் இடத்துக்கும் இருக்கக் கூடிய வித்தியாசத்தைப் பார்த்தீர்கள் என்றால், 12 சதவீதம். இங்கே பத்திரிகையாளர்கள், அரசியல் ஆர்வலர்கள் என்று பலரும் இருக்கிறீர்கள். உங்களுக்கே தெரியும், மூன்று சதவீதம் வித்தியாசம் இருந்தாலே கிளீன் ஸ்வீப்தான். 12 சதவீதம் என்றால், அது நிச்சயம் மிகப் பெரிய வெற்றிதான். அதில் எந்த மாற்றமும் இருக்காது. அதற்கென்று, நாங்கள் மெத்தனமாக இருக்க மாட்டோம்.

உங்களைப் பொறுத்தவரைக்கும், இந்த சர்வே ரிசல்ட், எங்களுக்கான பூஸ்ட். அவ்வளவுதான். ஏனென்றால், தி.மு.க. என்பது, எப்போதும், என்றென்றும், மக்களுடன் இருக்கக்கூடிய இயக்கம். மக்களுக்காக பாடுபடக்கூடிய இயக்கம். அதனால், இன்னும் உற்சாகமாக உழைத்து, உங்களுடைய கணிப்பை உண்மையாக்குவோம்.

கடந்த ஐந்த ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு என்ன நிலைமையில் இருந்தது என்று இங்கே இருக்கின்ற எல்லோருக்கும் தெரியும். அதேசமயம், இப்போது திராவிட மாடல் அரசு அமைந்து இந்த ஐந்து ஆண்டுகளில் வரலாறு காணாத வெற்றிப்பாதையில் தமிழ்நாடு வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது! வரும் தேர்தலில் வென்று, இந்த வளர்ச்சிப் பயணத்தை வெற்றிப் பயணத்தை திராவிட மாடல் 2.0-விலும் தொடர்வோம்.

ஊடக நண்பர்கள் மற்றும் அரசியல் பார்வையாளர்களான உங்கள் முன்பு சில புள்ளிவிவரங்களை நான் முன்வைக்கிறேன். தமிழ்நாட்டின் கடந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதம். இந்த இரட்டை இலக்க வளர்ச்சியை, கடைசியாக எப்போது எட்டினோம் தெரியுமா? 14 ஆண்டுகளுக்கு முன்பு, அதுவும் தி.மு.க. ஆட்சியில்தான். தமிழ்நாட்டுக்கு எதிராக செயல்படுவதிலும், தி.மு.க.அரசுக்குக் குடைச்சல் கொடுப்பதிலும் கவனமாக இருக்கும் ஒன்றிய அரசாலேயே, இந்த வளர்ச்சியை மறைக்க முடியவில்லை; மறுக்க முடியவில்லை.

தமிழ்நாட்டின் ஜிஎஸ்டிபி எவ்வளவு? 17 லட்சத்து 23 ஆயிரத்து 698 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. தனிநபர் வருமானம் 3 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய். தேசிய சராசரியுடன் கூட ஒப்பீடு செய்தால், இது, 1.74 மடங்கு அதிகம். அடுத்து, இந்தியா முழுவதும் 50 சதவீதம் அரசு மேல்நிலைப் பள்ளிகளில்தான் அறிவியல் ஆய்வகம் இருக்கிறது. இதுவே தமிழ்நாட்டில் 98.3 சதவீதம் பள்ளிகளில் ஆய்வகம் இருக்கிறது. N.I.R.F. தரவரிசையில், தலைசிறந்த நூறு கல்லூரிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்லூரிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 33. நாட்டின் முதல் 50 பல்கலைக்கழகங்களில் 10 தமிழ்நாட்டில்தான் இருக்கிறது!

நிதி ஆயோக் வெளியிட்ட S.D.G குறியீட்டில், 78 புள்ளிகளோடு, தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. இப்படி, எந்த புள்ளிவிவரங்களை எடுத்துக்கொண்டாலும், தமிழ்நாடு மேலே இருக்கிறது! அதனால்தான், 65-க்கு மேற்பட்ட ஒன்றிய அரசு விருதுகள் தமிழ்நாட்டை தேடி வருகிறது.

இப்படி ஏராளமான புள்ளிவிவரங்களை என்னால் பட்டியலிட முடியும். இதையெல்லாம் சாதாரணமாக நாங்கள் சாதித்துவிடவில்லை. ஏராளமான மக்கள் நலத் திட்ட ளை செயல்படுத்தி, எதிர்காலத்திற்கான முதலீடுகளை செய்து, சாதித்திருக்கிறோம்.

திராவிட மாடல் செயல்படுத்தும் திட்டங்களைப் பார்த்து, பல்வேறு மாநிலங்களில், அந்த திட்டங்களை கொண்டு வருகிறார்கள். இப்போதுகூட, எங்களின் தோழி விடுதியை மாடலாக எடுத்துக்கொண்டு. ஒன்றிய அரசு பட்ஜெட்டில் ஒரு திட்டம் அறிவித்திருக்கிறார்கள். எல்லோருக்கும் தரமான மருத்துவத்தை கொண்டு சேர்க்கவேண்டும் என்று நாங்கள் உருவாக்கிய மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை ஐ.நா. அமைப்பே விருது கொடுத்து பாராட்டியிருக்கிறது! நாங்கள் செய்வது எல்லாமே முன்னோடித் திட்டங்களாக மாறியிருக்கிறது.

தி.மு.க.அரசு தொடர்ந்தால் தான், தமிழ்நாட்டின் எதிர்காலம் நன்றாக இருக்கும் என்று மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்கு என்றைக்கும் உண்மையாக இருக்க வேண்டும் என்றுதான் நாங்கள் உழைத்துக் கொண்டிருக்கிறோம். அதேசமயம், இவ்வளவு நன்மைகள் செய்யக்கூடிய தி.மு.க.அரசுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படியெல்லாம் நெருக்கடிகளை கொடுக்கிறது என்பதையும் மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். நிர்வாக ரீதியாக இந்த அளவுக்கு இடைஞ்சல்கள் கொடுப்பது, ஆளுநரை வைத்தும், அவதூறுகள் பரப்பியும், அரசியல் ரீதியாக சீண்டிப் பார்க்கிறார்கள். ஊழல் கறை படிந்த அத்தனைபேரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு, பொய்களை பரப்பிகொண்டு, தேர்தலை சந்திக்க வருகிறார்கள். இந்த ஊழல் கூட்டணிக்கு பெயர் டபுள் எஞ்சின். அந்த டப்பா எஞ்சினுடைய லட்சணத்தை டெல்லி, உத்தரப் பிரதேசம், பிஹார் என்று பல மாநிலங்களில் பார்த்துகொண்டு தான் இருக்கிறோமே? இதையெல்லாம் பயன்படுத்தி ஜனநாயகத்தின் அத்தனை விழுமியங்களையும் ஒழித்திடவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்கு நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகள் நிச்சயம் இடம் கொடுக்கக் கூடாது. தமிழ்நாட்டிற்கு சேரவேண்டிய நிதியையும், நீதியையும் நிச்சயமாக நாங்கள் பெற்றுத் தருவோம். பாஜக-வின் பாசிச அரசியல் தமிழ்நாட்டில் நிச்சயம், நிச்சயம், நிச்சயமாக அது எடுபடாது! நிறைவேறாது.

திராவிட மாடல் 2.0-வில் தமிழ்நாட்டை காத்து இந்தியாவின் நம்பர்-1 மாநிலமாக தொடர்ந்து வளர்த்தெடுப்பது நிச்சயம்" என்றார் முதல்வர் ஸ்டாலின்

# நீங்கள் பாரத மாதாவை விற்றுவிட்டீர்கள்; நாடாளுமன்றத்தில் ராகுல் காந்தி ஆவேசம்



புதுடெல்லி:இந்தியா-- அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் பாஜக அரசு பாரத மாதாவைவிற்றுவிட்டது என்று நாடாளுமன்றத்தில் ராகுல்காந்தி கொந்தளித்து பேசினார்.

இந்தியா-அமெரிக்கா இடையிலான இடைக்கால வர்த்தக ஒப்பந்த செயல்திட்டம் இறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அமெரிக்கப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை 0% ஆக குறைக்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. அதற்கு பதிலாக, இந்தியப் பொருட்களுக்கான வரியை 18% ஆக குறைக்க அமெரிக்கா சம்மதித்துள்ளது. இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில், இந்தியாவின் தரவு மையங்களை பயன்படுத்தி 'கிளவுட் சேவை' களை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்க ளுக்கு 2047 ஆண்டு வரை வரி விலக்கு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்தை கடுமையாக சாடியுள்ள நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தி, எரிசக்தி துறையில் இந்தியாவின் பாதுகாப்பு பறிபோய்விட்டது என்று குறிப்பிட்டு ள்ளார். நாடாளுமன்றத்தில் மத்திய பட்ஜெட் மீதான விவாதத்தில் பங்கேற்று பேசிய ராகுல் காந்தி, "இந்த விவாதத்தில் என்னைப் பேச அனுமதித்ததற்கு நன்றி. உலகமே போரின் சகாப்தத்திற்குள் நகர்ந்து கொண்டிருக்கிறது. செயற்கை நுண்ணறிவு இந்த போராட்டத்தின் மையமாக இருக்கப்போகிறது. வரும்காலங்களில் ஏஐ-இன் விளைவுகள் அதி பயங்கரமாக இருக்கும் என இந்த அரசுக்கு எச்சரிக்கிறேன். நம் நாட்டிற்கு 1.4 பில்லியன் மக்கள் தான் பலம். இந்திய குடிமகன்கள் ஒவ்வொருவருடைய பலத்தை நாம் புரிந்துகொள்வது அவசியம். இந்த கிரகத்தின் மிகப்பெரிய தரவு தளமாக இந்தியா உள்ளது. ஏஐ தொழில்நுட்பத்திற்கு எரிபொருளாக தரவுகள் இருக்கின்றன.

'விவசாயிகளின் நலன்கள் சமரசம்'

இந்த வர்த்தக ஒப்பந்தம் மூலம் இந்தியர்களின் தரவுகளை இலவசமாக அமெரிக்காவுக்கு செல்வதற்கு மோடியின் பாஜக அரசு வழி ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. இந்தியா-அமெரிக்கா இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் பாஜக அரசு பாரத மாதாவை விற்றுவிட்டது. எரிசக்தி துறையில் நமது பாதுகாப்பு பறிபோய்விட்டது. விவசாயிகளின் நலன்கள் சமரசம் செய்யப்பட்டுவிட்டது.

அமெரிக்கா வல்லரசாக இருக்கவும், டாலர் மதிப்பை பாதுகாக்கவும் விரும்பினால் அதற்கான திறவுகோல் இந்திய தரவுகள்தான். அமெரிக்கா வங்கதேசத்தின் வரிகளை பூஜ்ஜியமாகக் குறைத்துள்ளது. ஆனால் இந்தியாவுக்கு 18 சதவீதமாக்கியுள்ளது. இதனால் இந்திய வரலாற்றில் முதல் முறையாக, நமது விவசாயிகள் ஒரு புயலை எதிர்கொள்கிறார்கள். நமது ஜவுளித் தொழிலும் போய்விட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கர்கள் எங்கள் நிதி மற்றும் ஆற்றலை ஆயுதமாக்க அனுமதித்துள்ளீர்கள்.

எங்கள் தாயை நீங்கள் விற்றுவிட்டீர்கள், உங்களுக்கு வெட்கமாக இல்லையா? பிரதமரின் கண்களில் பயம் தெரிகிறது. அமெரிக்காவில் உள்ள எப்ஸ்டீன் கோப்புகள் குறித்த வழக்கு பிரதமர் மோடியை இலக்காகக் கொண்டது" என தெரிவித்தார்.

ராகுல் காந்தி எப்ஸ்டீன் கோப்புகள் குறித்து தொடர்ந்து பேச அவையில் அனுமதி மறுக்கப்பட்டது. அப்போது ராகுல் காந்தி, இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் மூலம், 1.5 பில்லியன் இந்தியர்களின் எதிர்காலத்தை பிரதமர் மோடி அமெரிக்காவிடம் ஒப்படைத்து சரண் அடைந்துவிட்டதாக குற்றம்சாட்டினார்.

# புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி காரை முற்றுகையிட முயற்சி; போலீசார் தடியடியில் 14 பேர் காயம்



புதுச்சேரியில் பணி நிரந்தரம் செய்யக் கோரி, முதல்வர் ரங்கசாமி காரை திடீரென முற்றுகையிட முயன்ற பொதுப்பணித் துறை ஊழியர்கள் மீது போலீஸார் தடியடி நடத்தினர். இதில் 14 பேர் காயமடைந்தனர்.

புதுச்சேரி பொதுப்பணித் துறையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் வவுச்சர் ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என அண்மையில் முதல்வர் ரங்கசாமி சட்டப்பேரவையில் அறிவித்தார். ஆனாலும் இதுவரை அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை.

முதல்வர் அறிவிப்பின்படி, தங்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி அவர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் சிங்கார வேலர் நினைவு தினத்தையொட்டி கடலூர்-புதுச்சேரி சாலையில் நீதிமன்றம் அருகே உள்ள அவரது சிலைக்கு இன்று முதல்வர் ரங்கசாமி மாலை அணிவித்தார்.

பின்னர், அங்கிருந்து புறப்பட்டார் அப்போது வெங்கடசுப்பா ரெட்டியார் சதுக்கத்தில் ஒன்றுகூடியிருந்த பொதுப்பணித்துறை வவுச்சர் ஊழியர்கள் ஏராளமானோர் முதல்வரின் காரை முற்றுகையிட முயன்று அவரது காரை பின்தொடர்ந்தனர்.

உடனே அங்கு பாதுகாப்பில் இருந்த போலீஸார் வவுச்சர் ஊழியர்களை தடுத்து நிறுத்தினர். அப்போது முதல்வரின் கார், அந்த இடத்தை கடந்து சென்ற நிலையில், போலீஸாருக்கும் வவுச்சர் ஊழியர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த ஊழியர்கள் வெங்கட சுப்பா ரெட்டியார் சதுக்கம் அருகே நெல்லித்தோப்பு சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் தலைமையிலான போலீஸார் கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினர்.

அவர்கள் போராட்டத்தை கைவிட மறுத்தனர். இதனால் போலீஸாருக்கும், ஊழியர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது, ஊழியர் ஒருவருக்கு வலிப்பு ஏற்பட்டு விழுந்துள்ளார். அவரை சக ஊழியர்கள் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அந்த சமயத்தில், போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் போலீஸாரை கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர். இதனால் மீண்டும் தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் சப்-இன்ஸ்பெக்டர் கோவிந்தன், பெண் ஊர்க்காவல் படையினர் பவதாரணி, ராஜலட்சுமி ஆகியோரை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாக்கினர். இதையடுத்து போலீஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தடியடி நடத்தி கலைந்து செல்ல வைத்தனர். இதில் ஏனாமைச் சேர்ந்த படுகு சுப்புராஜ் (45) என்பவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் புதுச்சேரி அரசு பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், காயமடைந்த 13 ஊழியர்கள் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர் சங்கத் தலைவர் சரவணனை போலீஸார் கைது செய்தனர். இந்த சம்பவம் புதுச்சேரியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

'போலீஸ் தடியடி நடத்தியது அராஜகத்தின் உச்சம்':

புதுச்சேரியில் போலீஸார் தடியடி நடத்தியதில் காயமடைந்த 14 வவுச்சர் ஊழியர்கள் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை முன்னாள் முதல்வர் நாராயணசாமி, காங்கிரஸ் எம்எல்ஏ வைத்தியநாதன், திமுக எம்எல்ஏ அனிபால் கென்னடி, முன்னாள் எம்எல்ஏ அனந்தராமன், திமுக தொகுதி பொறுப்பாளர் கோபால் ஆகியோர் சந்தித்து ஆறுதல் கூறினர்.

**செய்திகள் உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## மதுராந்தகம் அருகே
# அதிமுக தேர்தல் அறிக்கை துண்டு பிரசுரம் வழங்கி தீவிர வாக்கு சேகரிப்பு
### மதுராந்தகம் எம்.எல்.ஏ. மரகதம் குமரவேல் பங்கேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வடக்கு ஒன்றிய உட்பட்ட ஈசூர், சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட செங்கல்பட்டு கிழக்கு பொதுமக்களிடையே எடுத்துக் கூறி எதிர்வரும் சட்டமன்றத் தேர்த-



கீழ்வலம், அரையப்பாக்கம், பகுதியில் உள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து அதிமுகவின் தேர்தல்அறிக்கைஅடங்கிய துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வையாவூர் வி.ஜி .குமரன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம், மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர்மரகதம்குமரவேல், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம், இவர்கள் வீடு வீடாக மற்றும் வயல்வெளியில் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து அதிமுக தேர்தல் அறிக்கையில் அதிமுக அமோக வெற்றி பெற செய்ய பொதுமக்களுக்கு தேர்தல் அறிக்கை கொண்ட துண்டு பிரசுரம் வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்த நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி கடையம் ஒன்றியம் புறக்காட்டான் புலியூர்கழக முன்னோடி ஆர்டிஸ்ட் பாலு அவர்கள் உடல் நலிவுற்று மிகவும் வறுமையில் இருந்து வருகிறார் . மேலும் மாவட்ட பிரதிநிதி துரைப்பாண்டியன் அவர்களிடம் எனக்கு ஒரு செல்போன் வேண்டும் என்று கேட்டுள்ளார் அதன் அடிப்படையில் இன்று அவருக்கு ஒரு செல்போன் அரிசி காய்கறி போன்ற பொருட்களும் மருத்துவ உதவி தொகையும் வழங்கினோம். நிகழ்வில் நானும் ஒன்றிய கவுன்சிலர் ஆவுடைகோமதி, ஒன்றியகவுன்சிலர் சங்கர், கடையம் ஒன்றிய அட்மா சேர்மன் குணசீலன் , மாவட்ட பிரதிநிதி ஸ்டீபன் சத்தியராஜ், அன்பழகன், துரைப்பாண்டியன் கிளைக் கழகச் செயலாளர் முருகன் ஊர் நிர்வாகி ராஜ பாண்டியன் , கிளை செயலாளர் செல்வராஜ் பிரதிநிதி சுடலையாண்டி விடியல் ஆர்த்தி, டாக்டர் அன்பழகன், கீழக்கடையம் பாக்கியராஜ், கவிஞர் செல்வவேல் மாயவநாதன் முன்னாள் ஊராட்சி உறுப்பினர் ராஜா, APN குணா, சேர்வைக்காரன்பட்டி ஊராட்சி துணைத்தலைவர் லட்சுமணன், மேகலிங்கராஜா ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அரிகிருஷ்ணன் சிவசக்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சென்று உடல் நலம் விசாரித்தோம்.



சேலம் மாவட்டத்தில் உள்ள பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட இடங்களில் குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட்டன. 1 முதல் 19 வயது வரை உள்ள 7 லட்சத்து 5 ஆயிரத்து 627 பேருக்கு மாத்திரை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், நேற்று நடைபெற்ற முகாமில் 7 லட்சத்து 92 ஆயிரத்து 727 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 20 முதல் 30 வயது வரை உள்ள 1 லட்சத்து 25 ஆயிரத்து 307 பேருக்கு இலக்கு நிரணயிக்கப்பட்டதில், 1 லட்சத்து 12 ஆயிரத்து 876 பேருக்கு மாத்திரை வழங்கப்பட்டுள்ளது



தூத்துக்குடி மாநகராட்சியில் 16 இடங்களில் மொத்தம் 1700 தூய்மை பணியாளர்களுக்கு தினமும் காலை உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ.2 கோடியே 75 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை தமிழக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் மற்றும் மேயர் ஜெகன் பெரியசாமி துவக்கி வைத்து தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கினர். இதைத்தொடர்ந்து தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு மாநகராட்சி பகுதியான அண்ணா பேருந்து நிலையம் வளாகத்தில் காலை உணவு வழங்கும் திட்டத்தை கிழக்கு மண்டல தலைவர் கலை செல்வி திலகராஜ் துவக்கி வைத்து தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கினர். நிகழ்வில் கழக நிர்வாகிகள் தூய்மை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம்
சார்பில்
## இலவச கண் கண்ணாடி வழங்குதல்



கண் அறுவை சிகிச்சை செய்துகொண்ட செய்தி வாசல் தனசேகர் அவர்களுக்கு தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் இலவச கண் கண்ணாடியை மாநிலத் தலைவர்எஸ்.சரவணன்அவர்கள்வழங்கினார். பொதுச்செயலாளர்கோ.சத்யநாராயணன், தென் சென்னை மாவட்ட செயலாளர் ப.புகழேந்தி ஆகியோர் உடனிருந்தனர். இடம்: சங்க தலைமை அலுவலகம், சென்னை92 என்றும் பத்திரிகையாளர் நலனில்.. எஸ்.சரவணன் தலைவர் தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் 9840035480

# காரைக்குடி அருகேயுள்ள கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகேயுள்ள கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியில் கள் குறித்து விளக்கி ஆசியுரை வழங்கினார்.

கல்லூரியின் தாளாளர் முனைவர் மா.வீரப்பன் இவ்விழாவில் முன் முக்கிய காரணியாக அமையும் எனக் கூறி சிறப்புரையாற்றினார். மேலும், விழாவில் கலந்து கொண்ட 165



10-ஆவது பட்டமளிப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவில் கோவிலூர் ஆதீனம் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் தலைமைவகித்து,பட்டம் பெறும் மாணவர்களுக்கு எதிர்காலங்களில் செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தவுள்ள தாக்கங்கள் மற்றும் அதை திறம்பட கையாள வேண்டிய வழிமுறைனிலை வகித்தார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் A. செந்தில்ராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மேற்படிப்பு பயில உள்ள மாணவர்கள் தங்களது கல்வியில் செயற்கைநுண்ணறிவை முன்னிலைப்படுத்தும் பாடங்களைத் தேர்வு செய்து பயில வேண்டும்; அவையே எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் க. கலா கல்லூரியின் ஆண்டு அறிக்கையை வழங்கி வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவில் முக்கிய பிரமுகர்கள், கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் அனைத்து இந்திய விவசாயிகள் சங்கம் மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் அவர்களின் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர் தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ.கோபிநாதன், மாவட்ட செயலாளர் கோ.தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் படி "ஈரோடு மாவட்ட குழந்தைகள் நலக்குழு உறுப்பினர் " வழக்கறிஞர் மு.தம்பிராஜா அவர் தம் பல்வேறு சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "தங்கமகன்" எனும் சிறப்பு விருது மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.

# மகா சிவராத்திரி, வார இறுதி நாளை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கம்




மகா சிவராத்திரி மற்றும் வார இறுதி விடுமுறையை முன்னிட்டு, தமிழ்நாடு அரசு சார்பில் 1,360 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. வரும் பிப்.12-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை சென்னையில் உள்ள கிளாம்பாக்கம், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய பேருந்து நிலையங்களிலிருந்து இந்த பேருந்துகள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான முன்பதிவு தற்போது நடைபெற்று வரும் நிலையில், பயணிகள் பயணத்தை திட்டமிட்டுக்கொள்ளுமாறு போக்குவரத்துத் துறை அறிவுறுத்தியுள்ளது.

# தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவர் நியமனம்
# காங்கிரஸ் நிர்வாகிகள் கடும் எதிர்ப்பு ; போராட்டம் நடத்த முடிவு

தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவராக ஆலங்குளம் செல்வராஜ் நியமிக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தென்காசி மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் விரைவில் மாநில காங்கிரஸ் தலைவர்கள், அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களை நேரில் சந்தித்து புதிய காங்கிரஸ் தலைவரை நியமிக்க கோரிக்கை மனு கொடுக்க இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று மாநில சோனியா காந்தி பேரவையின் பொதுச்செயலாளரும், தென்காசி மாவட்ட அனைத்து ஊ ர ா ட் சி க ள் கூட்டமைப்பின் தலைவரும், கோவிந்தப்பேரி ஊராட்சி மன்றத் தலைவருமான, கடையம் டி. கே.பாண்டியன் தென்காசியில் பத்திரிகையாளர்களை சந்தித்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவரை தேர்ந்தெடுக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக அகில இந்திய காங்கிரஸ் ஒரு குழுவை அ னு ப் பி ன ா ர் க ள் . அதன்படி தென்காசி மாவட்டத்திற்கு சத்தீஸ்கர் மாநிலத்தைச் சார்ந்த லக்கி என்பவருடன் ஐந்து பேர் கொண்ட குழுவை அனுப்பி வைத்தனர். அவர்கள் 10 வட்டாரங்கள், 6 நகராட்சிகள்,9 பேரூராட்சிகள்,221 ஊராட்சிகள், ஐந்து சட்டமன்ற தொகுதிகளை கொண்ட தென்காசி மாவட்ட பொறுப்பாளர்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து ஐந்து நாட்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி அவர்கள் அனைவரது கருத்துக்களையும் கேட்டனர்.

அதனைத் தொடர்ந்து தகுதியின் அடிப்படையில் மாவட்ட தலைவர் நியமனம் செய்வதாக கூறிவிட்டு கடந்த 18.01.2026 அன்று உடல்நலம் குன்றிய, வயது முதிர்ந்த சிறப்பாக செயல்பட முடியாத ஆலங்குளம் செல்வராஜ் என்பவரை அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பை கேட்டு தென்காசி மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் அனைவரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில் 80 சதவீத காங்கிரஸ் நிர்வாகிகள் இதற்குஎதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தென்காசி மாவட்ட காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளை சந்தித்து அவர்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறும் வகையில் நமது உள்ளாட்சி பிரதிநிதிகள் காங்கிரஸ் பொறுப்பாளர் களை சந்தித்து கையெழுத்து வாங்கியுள்ளோம். அதில் தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த 80 சதவீத காங்கிரஸ் நிர்வாகிகள் தென்காசி மாவட்ட தலைவர் ஆலங்குளம் செல்வராஜ் நியமனத்துக்கு எதிராக கையெழுத்து போட்டுள்ளனர்.



அதை நேரடியாக அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் தமிழககாங்கிரஸ்தலைவர்கள் பொதுச் செயலாளர்மற்றும்அனைவரையும் நேரில் சந்தித்து மனுக்களை கொடுக்க இருக்கிறோம்.

தென்காசி மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகள் பாராளுமன்ற தொகுதியில் பலமுறை காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இப்போது தேர்தல் நெருங்கி வரும் நிலையில் 85% காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு எதிராக ஒருவரைமாவட்டதலைவராக நியமனம் செய்தால் தேர்தல் களத்தில் காங்கிரஸ் நிர்வாகிகள் செயல்படுவதில் தடுமாற்றம் ஏற்படும். எனவே உடனடியாக மாநில காங்கிரஸ் நிர்வாகிகள் இந்த பிரச்சனையில் தலையிட்டு தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவராக தகுதி வாய்ந்த ஒருவரை தன்னலம் கருதாது உழைக்கக்கூடிய ஒரு இளைஞரை தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவராக நியமிக்க வேண்டும் என்று அவர்கள் அந்த கோரிக்கை மனுவில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஆலங்குளம் செல்வராஜை பதவி நீக்கம் செய்துவிட்டு தகுதி வாய்ந்த ஒருவரை தென்காசி மாவட்ட தலைவராக நியமிக்க கோரி 85 சதவீத காங்கிரஸ் நிர்வாகிகள் கையொப்பமிட்டுள்ள அந்த கோரிக்கை மனுவினை டெல்லிக்குச் சென்று காங்கிரஸ் தலைவர் கார்கே மற்றும் ராகுல் காந்தியை சந்தித்து கோரிக்கை மனுவினை கொடுக்கவும், சென்னையில் சத்தியமூர்த்தி பவுனில் உள்ள காங்கிரஸ் மாநில தலைவரை சந்தித்து இந்த கோரிக்கை மனுவினை வழங்க இருக்கிறோம்.

அதன் பிறகும் உரிய நடவடிக்கை எடுக்க தாமதித்தால் மார்ச் முதல் வாரத்தில் ஆயிரக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்களை திரட்டி பெரிய அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்ச்சியில் மாநில சோனியா காந்தி பேரவையின் பொதுச் செயலாளர் கடையம் டி.கே. பாண்டியன், தென்காசி மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் வேலுச்சாமி தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் யூசுப் மாநில சோனியாகாந்திபேரவை துணைத் தலைவர் கோதரி, கீழப்பாவூர் நகர முன்னாள் காங்கிரஸ் தலைவர் பொன் ராஜகோபால் ஆகியோர் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், மத்திய பேருந்து நிலையம் வளாகத்தில் நேற்று (11.02.2026) கூட்டுறவுத் துறை சார்பில் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியினை திறந்துவைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகராட்சி துணை மேயர் வே. செல்வராஜ், கூட்டுறவுச்சங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா, சிந்தாமணி இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் செல்வக்குமரன் உட்பட பலர் உள்ளனர்.

# தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக தாமஸ் ஆல்வா எடிசன் பிறந்தநாள் கொண்டாட்டம்

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கசிவகங்கை மாவட்டம் சார்பாக தாமஸ் ஆல்வா எடிசனின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியர் தெய்வானை தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரையாற்றினார். பள்ளியின் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி மென்லோ பார்க் வழிகாட்டி என்று அறியப்படும் தாமஸ் ஆல்வா எடிசனின் அளப்பரிய சாதனைகளான மின்விளக்கு ஒளிப்பதிவு கருவி திரைப்பட கேமரா போன்ற 1093 புதிய கண்டுபிடிப்புகளும் மக்களால் நினைவு கூறப்படக்கூடியதாகவும் நான் 10,000 முறை தோல்வியடையவில்லை. வேலை செய்யாத 10,000 வழிகளைக் கண்டறிந்துள்ளேன் என்பது எடிசனின் புகழ்பெற்ற கூற்றாகும். தோல்விகளே வெற்றிக்கான படிக்கட்டுகள் என்பதை அவர் தனது வாழ்க்கை மூலம் நிரூபித்தார் எனவும் அவருடைய சிறப்புகளை நினைவு கூர்ந்தார். மகிழ் முற்றம் சார்பாக ஒவ்வொரு அணிகளும் தங்கள் அணியில் உள்ள மாணவ மாணவிகளை அறிவியல் கண்காட்சிக்கு தயார்படுத்த கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியர்கள் கமலம்பாய் வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா பள்ளி மேலாண்மை குழு செயற்குழு உறுப்பினர்கள் சத்துணவு உதவியாளர்கள் அஞ்சலை கஸ்தூரி சிலம்பம் மாஸ்டர் ராதா கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




## பாங்காக்கில் இருந்து கொழும்பு வழியாக

# மதுரைக்கு சாக்லேட் பாக்கெட்டுகளில் மறைத்து கடத்தி வரப்பட்ட ரூ. 9.5 கோடி மதிப்பிலான 9.5 கிலோ ஹைட்ரோபோனிக் கஞ்சா பறிமுதல்

## மதுரை விமான நிலையத்தில்

## சுங்க அதிகாரிகள் சோதனையில் அதிரடி நடவடிக்கை



மதுரைவிமானநிலையத்தில் பாங்காக்கிலிருந்து கொழும்பு வழியாக மதுரைக்கு வந்த கேரளாவை சேர்ந்த முகமது ஷஹர்பில் (27):ஆண் பயணி, தனது சோதனைப் பையில் மறைத்து போதைப் பொருளை கடத்த முயற்சிப்பதாக மதுரை விமானப்படை புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு வந்த ரகசியத் தகவலின் அடிப்படையில், மதுரை விமானப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நேற்று மதியம் 2.30 மணிக்கு பாங்காக்கிலிருந்து மதுரை சர்வதேச விமான நிலையத்திற்கு UL-139 ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் வந்த பயணியை தடுத்து சோதனையிட்டதில் பயணி தான் கொண்டு வந்த சாக்லேட் பாக்கெட்டுகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 9.5 கிலோ ஹைட்ரோபோனிக்களை (கஞ்சா) அதிகாரிகள் மீட்டனர். பறிமுதல் செய்யப்பட்ட 9.5 கிலோ ஹைட்ரோபோனிக் களை (கஞ்சா) களின் சந்தை மதிப்பு ரூ. 9.5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 9.5 கிலோ ஹைட்ரோபோனிக் களை ) பறிமுதல் செய்யப்பட்டு, NDPS சட்டம், 1985 இன் விதிகளின் கீழ் பயணி கைது செய்யப்பட்டார்.மேலும் விசாரணை நடந்து வருகிறது. மதுரைக்கு 9.5 கோடி மதிப்பில் கடத்திவரப்பட்ட உயர் ரக கஞ்சா பிடிபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இந்திய குடும்பங்களிடம் ரூ.452 லட்சம் கோடி தங்கம்!



புதுடெல்லி:இந்தியக் குடும்பங்களின் கைவசம் தற்போது ஒட்டுமொத்தமாக 30,000 டன் தங்கம் கையிருப்பு இருக்கும் என்று சமீபத்திய மதிப்பீடு கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வருகிறது. இதன் காரணமாக,அதன் மதிப்பு 5 டிரில்லி யன் டாலர் என்ற அளவை எட்டியுள்ளது. இது, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பான (ஜிடிபி) 4.125 டிரில்லியன் டாலரை விட அதிகம்.இந்திய குடும்பங்களின் கைவசம் உள்ள தங்கத்தின் மதிப்பு இந்திய ரூபாய் மதிப்பில், சுமார் ரூ.452 லட்சம் கோடியாக உள்ளது. சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எஃப்) வெளியிட்டுள்ள உலக பொருளாதார பார்வை அறிக்கையில் இடம்பெற்றுள்ளது. உலக அளவில் இந்தியாவில் தான் அதிக அளவில் மக்கள் தங்கத்தைக் கையிருப்பாக வைத்திருக்கின்றனர் என்பது குறிப்பிட த்தக்கது.

# தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்; மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது




தூத்துக்குடி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க மாநகராட்சி பகுதியில் உள்ள நான்கு மண்டல அலுவலகங்களிலும், புதன்கிழமை தோறும் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்று வருகிறது. அதன்படி மேற்கு மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற குறைதீர்க்கும் முகாமிற்கு மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில்: கடந்த 19 மாதமாக பொதுமக்களின் குறைதீர்க்கும் முகாம் 4 மண்டலங்களிலும்சுழற்சி முறையில் நடைபெறுகிறது. இந்த மண்டலத்திற்குட்பட்ட 15 வார்டுகளையும் சேர்ந்த மக்கள் பயனடைகின்றனர். இதுவரை இந்த மண்டலத்தில் பெறப்பட்டதில் 987 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மாநகராட்சி பகுதியில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். குறிப்பாக பள்ளி கல்லூரி கோவில் சா்ச் மசூதி உள்ளிட்ட மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளில் சாலை கால்வாய் உள்ளிட்ட பணிகளுக்கு முக்கியத்துவம்கொடுத்து தீா்வு காணப்பட்டுள்ளது. புதிய பூங்காக்கள் பல அமைத்துள்ளோம் அதுவும் மக்கள் விரும்பும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பெண்களுக்கு முதியோர்களுக்கு கென்று தனியாக

ஒரு பூங்கா வேண்டும் என்று கோரிக்கை வரப்பெற்றுள்ளது. அதை நானும் ஆணையரும் ஆலோசனை செய்து அமைக்கப்படும். மேலும் மழை தான் நமக்கு சவாலாக இருந்தது குறிப்பாக 2023, 2024ம் ஆண்டு மழை நமக்கு ஒரு எடுத்துக்காட்டு 2, 16 ,17, உள்ளிட்ட 3 இடங்களில் தான் மழை நீர்தேங்கும்நிலைஏற்பட்டுள்ளது. அந்த பகுதியில் சிலசமயங்களில் மின்சாரம் தடைபடுவதால் தாமதமானது.மாநகரில்உள்ள மழை நீர் முறையாக சென்று கொண்டிருக்கிறது. புறநகா் பகுதியிலிருந்து வரக்கூடிய தண்ணீராது முறைப்படுத்தி பக்கீள் ஓடை மூலம் கடலுக்கு செல்லும் வகையில் உருவாக்கப்பட்டதால் பாதிப்புகள் ஏற்படவில்லை இனி வரும் காலங்களில் எந்த பாதிப்பும் ஏற்படாது. பக்கீள் ஓடையை பொறுத்தவரை தற்போது இருக்கும் பகுதியை விட 5 மீட்டா் சில பகுதிகளில் அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதன் இருபுறங்களிலும் அமைக்கப்பட்ட சாலைகளில் மூலம் போக்குவரத்து நெரிசலின்றி பள்ளி செல்லும் மாணவமாணவிகள் உள்படபலா்சென்று வருகிறாா்கள்.அந்த பகுதியில் உள்ள ஒரு சில குறைகளையும் நிவா்த்தி செய்து கொடுப்போம்.40 ஆண்டுகளுக்கு முன்பு பாா்த்த அதே சாலைதான் இப்போதும் இருக்கிறது. அதை நாம் பொறுப்புக்கு வந்தபோதுமுறைப்படுத்தி அண்ணாநகா் ஜெயராஜ் ரோடு டபிள்யுஜிசி ரோடு உள்ளிட்ட பல பகுதிகளில் வாகன நிறுத்துவதற்கும் பொதுமக்கள் இடையூறின்றி நடந்து செல்வதற்கும் வழிவகை செய்துள்ளோம். மேலும் பல பகுதிகள் இதுபோன்று விரிவாக்கம் செய்து மக்கள் நலனை பாதுகாக்கும் வகையில் இன்னும் 25 வருடம் கழித்து எப்படி இருக்க வேண்டும் என்பதை திட்டமிட்டு பணியாற்றி வருகிறோம் நீர்வழித்தடமான பக்கீள் ஓடை ஆரம்பம் முதல் கடைசி வரை உள்ள 7 கிலோமீட்டா் தூரத்தில் இடைப்பட்ட பகுதியில 15 பாலங்கள் உள்ளனஅதில் முத்துநகா், பேசுகிறது. என்று ஒரு வழிப்புணா்வு பாதாகை வைக்கவுள்ளோம். பிளாஸ்டிக் கேரி பேக் தடை செய்யப்பட்டு 3 ஆண்டுகள் ஆகிறது. வரும் போது அந்த வழியாக தான் வந்தேன். பாா்த்தால் அனைத்தும் கேரி பேக் கப் போன்றவைகள் தான் கிடக்கிறது. இதை பொதுமக்கள் பயன் படுத்துவதை தவிர்க்க வேண்டும் இதனால் சில சமயங்களில் அடுத்த கட்ட பணிகளை செய்வதற்கு சிரமம் ஏற்படுகிறது. இந்த பொருட்களை இனியும் பயன்படுத்தினால் அவா்கள் மீது வழக்கு பதிவு செய்வதை தவிர வேறு வழியில்லை. டூவிபுரம் பிரையண்ட்நகா் உள்ளிட்ட பல பகுதிகளில் இணைக்கும் வகையில் புதியசாலைகளும் அமைக்கப்படும். இன்னும் 3 மாத காலத்திற்குள் அனைத்தும் நிறைவுபெற்று மாநகராட்சி பகுதி வளா்ச்சி பெற்ற இடமாக இருக்கும் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் மாநகராட்சி ஆக்கிரமிப்பு எங்கிருந்தாலும் அது அகற்றப்படும் என்று மேயர் பேசினாா்.

கூட்டத்தில் ஆணையர் ப்ரியங்கா, துணை மேயா் ஜெனிட்டா ஆகியோா் மேற்கு மண்டலத் தலைவா் அன்னலட்சுமி, துணை ஆணையா் சரவணக்குமாா், உதவி செயற்பொறியாளர் காந்திமதி, சுகாதார ஆய்வாளர் ராஜபாண்டி, இளநிலை பொறியாளர் லெனின், உதவி இளைநிலை பொறியாளா்கள் ராகவி, ஜெயசூா்யா, கவுன்சிலர்கள் சந்திரபோஸ், பொன்னப்பன், விஜயலட்சுமி, கந்தசாமி, ஜான், இசக்கிராஜா, குழாய் ஆய்வாளர் பாலு, பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா, மாவட்ட பிரதிநிதி ஏசுவடியான், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் செல்வின், பகுதி பொருளாளா் முத்துராஜா, வட்ட துணைச்செயலாளர் தங்க சேகா், ஆணையரின் நோ்முக உதவியாளர் துரைமணி, மேயாின் நேர்முக உதவியாளர் ரமேஷ், போல்பேட்டை பகுதி பிரதிநிதி பிரபாகா், மாநகராட்சி அலுவலா்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு தலைகுனியாது என்ற கொள்கை உறுதியோடு பணியாற்றுவோம் என்று எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ. பேச்சு



தூத்துக்குடி திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க தமிழ்நாடு தலைக்குனியாது பொதுக்கூட்டம் தெற்கு மாவட்ட திமுக தூத்துக்குடி கிழக்கு ஒன்றியம்சார்பில் மாப்பிள்ளையூரணி சிலுவைப்பட்டி விலக்கில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் திமுக சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ரவி என்ற பொன்பாண்டி பிரம்மாண்ட மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் இளையராஜா ஜெயக்கொடி சுப்பிரமணியன், ராமசாமி, சுரேஷ்காந்தி, பகுதி செயலாளர்கள் சிவக்குமார், ஆஸ்கர், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர் சரவணக்குமார் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ பேசுகையில்: தமிழகத்தில் உள்ள மக்களை எல்லாம் பாதுகாக்க வேண்டும் தமிழ் மண்ணை பாதுகாக்க வேண்டும் என்பதுதான் தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்களுடைய எண்ணம். கடந்த 10 ஆண்டுகளாக அதிமுக ஆட்சியில் தமிழ்நாடு எப்படி இருந்தது.

ஆனால் இப்போது தமிழ்நாடு தலை குனியாது இந்த மக்களுக்காக உழைக்கக்கூடிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021ல் கொரோனா வந்த போது 5 ஆயிரம் வழங்க வேண்டும். என்று தளபதியாா் கூறிய போது எடப்பாடி ஆயிரம் தான் வழங்கினாா். முதலமைச்சராக ஸ்டாலின் பொறுப்பேற்றதும் மீதி நான்காயிரத்தை எல்லோருக்கும் வழங்கினார். விடியல் பயணம் திட்டத்தின் மூலம் 72லட்சம் பேர் பயனடைகின்றனர் ஒவ்வொருக்கும் மாதம் 888 முதல் 1200 வரை மிச்சம் ஏற்படுகிறது. 2023 முதல் மகளிர் உரிமைத்தொகை 1000 வீதம் 29 மாதம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 1 கோடியே 31 லட்சம் போ் பயனடைந்து வருகின்றனா். இப்படி பல திட்டத்தை அறிவித்து நடைமுறைப்படுத்தி செயல்படுத்துவது மட்டுமின்றி கொடுத்த வாக்குறுதிகளில் 98 சதவீதம் தளபதியாா் நிறைவேற்றியது மட்டுமின்றி சொல்லாத பல திட்டங்களையும் செய்துள்ளார். ஆனால் மோடி 15 லட்சம் எல்லோருக்கும் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்தார். ஆனால் இன்று வரை அதை வழங்காமல் ஏமாற்றும் அரசாக பிஜேபி அரசு இருக்கிறது. அதே போல் காலையில் பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் எத்தனை பேர் உணவு உட்கொள்கிறார்கள் என்று ஆய்வுக்கு சென்ற போது 100 பேரில் 50 போ் தான் சாப்பிட்டு விட்டு வருகின்றனா். அந்த பசியையும் போக்கும் வகையில் உலகத்திற்கே வழிகாட்டும் வகையில் காலை உணவு திட்டத்தின் மூலம் பள்ளி குழந்தைகள் நலன், பாதுகாக்கப்பட்டு கல்வின் தரம், உயா்வதின் மூலம் மாணவா்களின் சேர்க்கையும் அதிகாித்துள்ளது. இப்படி எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு தலைகுணியாது என்ற கொள்கை உறுதியோடு பணியாற்றுவோம். 2026ல் நடைபெறவுள்ள சட்டமன்ற தோ்தலில் 7வது முறையாக திமுகவும் 2வது முறையாக தளபதியாரும் ஆட்சியில் அமர வேண்டும். அதற்கு அனைவரும் சபதம் ஏற்று பணியாற்ற வேண்டும் என்று எம்.சி சண்முகையா பேசினார் தொடர்ந்து தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியும், மாநில விவசாய அணி செயலாளருமான விஜயன் பேசுகையில்:

இந்தியாவில் சிறந்த தலைவராக விளங்கியவா் நம்முடைய கலைஞர் காரணம் ஒரு கப்பலுக்கு கடலில் செல்லும் போது அதற்கு மாலுமி எவ்வளவு முக்கியமோ அதே போல் தமிழகத்தை வழி நடத்தி தமிழ் மக்களை பாதுகாத்தாா். அதே வழியில் கொள்கை மாறாமல் நம்முடைய முதலமைச்சர் ஸ்டாலின் இன்று வரை தடம் மாறாமல் ஒன்றிய அரசு நமக்கு தரவேண்டிய தொகை எதுவுமே தராமல் இங்கிருந்து ஒரு ரூபாயை பெற்று கொண்டு நமக்கு 29 பைசாவும் பீஹாருக்கு 7ரூபாய் 6 பைசாவும் உத்திரபிரதேசத்திற்கு 2ரூபாய் 46 பைசாவும் வழங்குகிறது. இப்படி எல்லா வகையிலும் நம்மை ஏமாற்றிக்கொண்டிருக்கும் ஒன்றிய அரசிற்கு தமிழக அரசு என்றும் தலைகுனியாது. தமிழ்நாடு தமிழ்மக்கள் என்று பணியாற்றும் தளபதியாா் ஆட்சியில் இந்த மாவட்டத்தில் மட்டும் நடைபெற்ற திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகள் இதை யெல்லாம் எண்ணி பார் த்து மீண்டும் திமுகவிற்கு வாக்களிக்க வேண்டும். என்று பேசினார்.

கூட்டத்தில் மாநில வா்த்தகஅணி இணைச்செயலாளர்கள் உமரிசங்கக்ர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாடசாமி, செந்தூர்மணி, மாவட்ட அவைத்தலைவர் அருணாச்சலம் துணைச்செயலாளா்கள் ஜெயக்குமாா் ரூபன், ஜெபத்தங்கம் பிரேமா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளா் ராமஜெயம், துணை அமைப்பாளர்கள் வக்கீல் பால்துரை, ஸ்டாலின், தொண்டரணி அமைப்பாளா் வீரபாகு, இலக்கிய அணி அமைப்பாளர் ரகுராமன், வழக்கிறஞா் அணி அமைப்பாளர் செல்வக்குமார், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ரவி என்ற பொன்பாண்டி, மாணவரணி துணை அமைப்பாளர் தங்கமாாிமுத்து, தொழிலாளா் அணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ்பாலன், மாநகராட்சி கணக்கு குழு தலைவர் ரெங்கசாமி, மாவட்ட பிரதிநிதிகள் சிவக்குமாா், தா்மராஜ், சப்பாணிமுத்து, பூபேஸ்நாதன், தா்மராஜ், வெயில்ராஜ், ஒன்றிய அவைத்தலைவர் ஜோதிடர் முருகன், துணைச்செயலாளர்கள் வசந்தகுமாாி, ராமசந்திரன், ஒன்றிய நிா்வாகிகள் சோனாராஜன், பாரதிராஜா, காமராஜ், முருகன், சக்திவேல், பாலுநரேன், ராயப்பன், சண்முகத்தாய், ஜெஸிந்தா, அன்புரோஸ், பொன்னுச்சாமி, அங்காளஈஸ்வாி, தங்கபாண்டி, சந்திரசேகா், நெல்சன், மாாியப்பன், கப்பிகுளம் பாபு, உள்பட பலா் கலந்து கொண்டனா். ஒன்றிய துணைச்செயலாளர் கணேசன் நன்றியுரையாற்றினார்.

# மதுரை விமான நிலைய விரிவாக்கம், சின்ன உடைப்பு கிராம மக்கள் அமைச்சர் மூர்த்தியின் கொடுபாவி எரிக்க முயன்றால் பரபரப்பு

## பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தியதால் சலசலப்பு ஏற்பட்டது



*மதுரைவிமானநிலையம் விரிவாக்கம் நிலம் கையகப்படுத்துவதற்கு எதிராக சின்ன உடைப்பு கிராம மக்கள் 8வது நாளாக மதுரை- தூத்துக்குடி நெடுஞ்சாலைக்கு அருகே அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*சின்ன உடைப்பு விவகாரம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கில் வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது நீதிபதிகள் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.*

*மதுரைவிமானநிலையத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்த 633.17 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 17.87 ஏக்கர் நிலம் சின்ன உடைப்பு கிராமத்தில் கையகப்படுத்த உள்ளன. இது தொடர்பாக அங்கு நீண்டகாலமாக இழுபறி நீடிக்கிறது. 1999-ல் கணக்கெடுக்கப்பட்டு, 2009-ல் நோட்டீஸ் வழங்கப்பட்டு,2022-ல்64 வீடுகளுக்கு மட்டும் அரசு இழப்பீடு வழங்கியது. கடந்த 2024-ல் அதிகாரிகள் நிலத்தைக் கையகப்படுத்த வந்தபோது கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். தற்போதைய சந்தை மதிப்பில் இழப்பீடு வழங்க வேண்டும், மாநகராட்சி எல்லைக்குள் 3 சென்ட் நிலம் மற்றும் வீடு கட்டித் தர வேண்டும் என வலியுறுத்தி ஒரு ஆண்டிற்கும் மேலாகப் போராடி வருகின்றனர். சின்ன உடம்பில் அதிகாரிகள் கணக்கெடுப்பின்படி 64 வீடுகளுக்கு இரண்டு செண்ட் வழங்கப்பட்டுள்ளது அந்த கணக்கெடுப்பு தவறானது என்றும் சின்ன உடப்பு கிராம மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடி வருகின்றனர்.*



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், மத்திய பேருந்து நிலையம் வளாகத்தில் நேற்று (11.02.2026) கூட்டுறவுத் துறை சார்பில் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியினை திறந்துவைத்துமுதல்விற்பனையினைதுவக்கிவைத்தார்.உடன்மாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி,ஈரோடுகிழக்குசட்டமன்றஉறுப்பினர்வி.சி.சந்திரகுமார், மாநகராட்சிதுணை மேயர்வே.செல்வராஜ்,கூட்டுறவுச்சங்களின்இணைப்பதிவாளர்ப.கந்தராஜா,சிந்தாமணி இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் செல்வக்குமரன் உட்பட பலர் உள்ளனர்.

# கைலாசநாதர் மலைக்கோயிலில் மகாசிவராத்திரி 24 ஆம் ஆண்டு விழா அழைப்பு

*தேனி மாவட்டம் பெரியகுளம் கைலாசபட்டி அருகில் உள்ள கைலாசநாதர் மலைக்கோயிலில் வருகின்ற 15/02/2026 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணி முதல் அதிகாலை 5.30 மணிவரை மகாசிவராத்திரி நான்கு காலபூஜை வழிபாடு முதல்காலபூஜை இரவு10 மணி இரண்டாம் காலபூஜை இரவு 12 மணி மூன்றாம் காலபூஜை இரவு 2மணி நான்காம்காலபூஜை பிரம்ம*





*முகூர்த்தம் பூஜை 4 நான்கு மணியளவில் நடைபெற இருக்கின்றது. சித்தர்கள், ரிஷிகளும் கைலாசநாதர் மலையை சுற்றி சூட்சமமாக வந்து கைலாசநாதரை வழிபடுகிறார்கள் என்று சான்றோர்கள் ஆன்றோர்கள் கூறுகிறார்கள். மகாசிவராத்திரி இந்த இனிய சிவராத்திரியில், கூட்டு வழிபாட்டுடன் தேவாரம், திருவாசகம், பாடி இறைவனை போற்றி வழிபடுவோம் . திருவண்ணாமலை அருளால் கைலாசநாதர் மலைக்கோயிலில் 2001-ல் மாசி மாதம் பௌர்ணமி கிரிவலமும் 2002-ல் மகா சிவராத்திரி விழாவும் அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழுவினர்கள் கைலாசநாதர் அருளால் ஆரம்பித்தார்கள் பக்தர்கள் பாதையை இல்லாத போது மலையை சுற்றி கிரிவலம் வந்து தரிசனம் செய்த இந்த மலை பல்லாயிரம் பக்தர்கள் கிரிவலம் வந்து தரிசனம் செய்கின்றார்கள். கைலாசநாதர் மலைக்கோயில் உள்ள "கைலாசநாதர் என்றால் தியான நிலையில் இருப்பவர்." பக்தியுடன் தரிசனம் செய்ய வருகைதரும் பக்தர்களின் எண்ணம் செயல்,மனதை அறிந்து அருள்புரிந்து வருகிறார். பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேறுகிறது என்று இங்கு வரும் பக்தர்கள் கூறுகின்றனர். மகாசிவராத்திரி விழா அன்று குழுவின் சார்பாக ஐந்து முகம் ருத்ராட்சம் வழங்கபடும். இரவு 7 மணி முதல் அன்னதானமும் பிரசாதமும், சுக்கு மல்லி காபியும் வழங்கபடும் அது சமயம் பக்தர்கள் இறையருள் பெற வருகைதருமாறு அன்புடன் அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழுவின் சார்பாக அழைக்கின்றனர்.*



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அடுத்த, மக னூர்பட்டி பஞ்., உட்பட்ட முசிலி கொட்டாய் கிராமத்தில் 200 மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள ரேஷன்கடைவாடகைகட்டிடத்தில்இயங்கிவருகிறது.ரேஷன்கடைக்குசொந்தகட்டிடம் கட்ட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.பகுதி மக்களின் கோரிக்கையைஏற்றுகடந்த2022,23ஆண்டுகிருஷ்ணகிரிஎம்.பி.,செல்லகுமார்தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 12.30 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, புதிய ரேஷன் கடை அனைத்துவசதிகளுடன்கட்டிடம்கட்டப்பட்டது.நேற்றுபுதியரேஷன்கடைகட்டிடத்தை பர்கூர் எம்.எல்.ஏ., மதியழகன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார்.இதில், மாவட்ட பொருளாளர் கதிரவன், ஒன்றிய செயலாளர்கள் வடக்கு குமரேசன்,மத்திய எக்கூர் செல்வம்,தெற்கு ரஜினிசெல்வம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காந்தி,மாவட்ட துணை செயலாளர் சந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ.,கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் பஞ்.,தலைவர் கலில் மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

# பறவை காய்ச்சல் குறித்து சுகாதார அறிவுரைகள் கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



*பறவை காய்ச்சல் என்பது பெரும்பாலும் பறவைகளுக்கு இடையே பரவும் ஒரு வைரஸ் நோயாகும். பாதிக்கப்பட்ட பறவைகளிடமிருந்து மற்ற பறவைகளுக்கு பரவுவதால் பறவை இறப்பைவைத்து இறந்த பறவைகளின் பரிசோதனையின் மூலம் கண்டுபிடிக்கப்படுகிறது. இந்த நோயானது மனிதர்களுக்கு பரவும் வாய்ப்பு மிகவும் அரிது. காய்ச்சல், இருமல், தொண்டை வலி, உடல் வலி போன்றவை இந்நோயின் சில அறிகுறிகள் ஆகும். இந்நோயானது பறவைகளிடமிருந்து மனிதர்களுக்கு நேரடியாகவும் தூய்மை கேடு உள்ள சூழ்நிலையிலும் பரவ வாய்ப்பு உள்ளது. இது சம்பந்தமாக பொது மக்களுக்கு கீழ்க்கண்ட சுகாதார அறிவுரைகள் வழங்கப்படுகிறது.*

*ப்ளு போன்ற அறிகுறிகள் (ILI) - இருமல், சளி, காய்ச்சல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் உள்ளவர்கள் உடனே மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.*

*பறவைகளை கையாள்பவர்கள் குறிப்பாக உடல்நலம் குன்றிய பறவைகளை கையாள்பவர்கள்,இறந்த பறவைகளை கையாளுவார்கள் மற்றும் இறைச்சி கூடத்தில் பணிபுரிபவர்கள் கவனத்துடன் பணிபுரியவும். ஏதேனும் ப்ளு காய்ச்சல் அறிகுறிகள் இருப்பின் அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம்/ அரசு மருத்துவமனை/ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஆலோசனை பெற வேண்டும் மருத்துவ அசாதாரண பறவை இறப்புகள் இருப்பின் உடனே கால்நடை மருத்துவத்துறைக்கு தெரிவிக்க வேண்டும். கைகளை கழுவுதல் உட்பட தன் சுத்தம் மற்றும் சுற்றுப்புறத்தினை சுகாதாரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.*

*முற்றிலும் சமைக்கப்படாத மற்றும் சரிவர சமைக்கப்படாத முட்டை மற்றும் இறைச்சி வகைகளை உண்பதைதவிர்க்க வேண்டும்.*

*பறவை காய்ச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும்.*

*இந்நோய் சம்பந்தமான வதந்திகளை நம்ப வேண்டாம். மேலும் கூடுதல் தகவல்களுக்கு தொலைபேசி எண் 104-ஐ தொடர்பு கொள்ளவும்.*



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், மேட்டுக்கடை, தங்கம் மஹாலில் நேற்று (11.02.2026) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா 2026 நிகழ்ச்சியினை துவக்கி வைத்து, சீர்வரிசைப்பொருட்களை வழங்கி, பேசினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்) ஐ.பூங்கோதை, மாமன்ற உறுப்பினர்கள், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ப.சாந்தி உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோட்டில் பிறந்தநாள் நாளில் மாணவருக்கு பெருமை சேர்த்த மண்டல தலைவர் அரசு பள்ளி மாணவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தி நெகிழ்ச்சி

*ஈரோடு மாநகராட்சி இரண்டாம் மண்டல தலைவரும், திமுக மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளருமான காட்டு சுப்பு (எ) மு.ப.சுப்ரமணியம் தனது பிறந்தநாளைமுன்னிட்டு ஆர்.என்.புதூரில் உள்ள செவித்திறன் குறைபாடுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுடன் இணைந்து நெகிழ்ச்சியான முறையில் கொண்டாடினார். தனது குடும்பத்தினருடன்பள்ளிக்குச் சென்றஅவர்,அங்கு பயிலும் 50-க்கும் மேற்பட்ட மாணவ - மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கினார். அப்போது, அங்கு பயிலும் ஒரு மாணவனுக்கும் இன்று பிறந்தநாள் என்பதை அறிந்த மண்டல தலைவர்,அந்த மாணவனைத் தட்டிக்கொடுத்து வாழ்த்தியதோடு, அந்த மாணவன் மூலமாகவே மற்ற மாணவர்களுக்கு உணவு பரிமாறச் செய்து அழகு பார்த்தார். தொடர்ந்து மாணவர்களுடன் தரையில் அமர்ந்து சிற்றுண்டி அருந்திய அவர், மாணவர்களின் கல்வித் தேவைக்கு எப்போதும் உறுதுணையாக இருப்பேன் எனத் தலைமை ஆசிரியரிடம் உறுதி அளித்தார். இந்த நற்பணியில் திமுக நிர்வாகிகள் தனசேகரன், பெ. தனராஜ்,இளங்கோ,சம்பத்குமார், லட்சுமிகாந்த் மற்றும் எஸ்.அப்பாசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.*





தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், மேட்டுக்கடை, தங்கம் மஹாலில் நேற்று (11.02.2026) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா 2026 நிகழ்ச்சியினை துவக்கி வைத்து, சீர்வரிசைப்பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் சு. நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்) ஐ.பூங்கோதை, மாமன்ற உறுப்பினர்கள், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ப.சாந்தி உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு மாவட்டம் பாசூரில் மகளிருக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பு தொடக்கம் முன்னாள் எம்.எல்.ஏ மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்பு

*ஈரோடு மாவட்டம் பாசூர், கொடுமுடி ஒன்றியம் ஆர்.எஸ்.மெயின் ரோட்டில் அமைந்துள்ள கோபால் கட்டிடத்தில், அன்னைதெரசாபேரவை ஈரோடு மாவட்ட கிளை சார்பில் மகளிருக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பு தொடக்க விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் அமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த விழாவிற்கு, ஈரோடு மாவட்டத் தலைவர் கனகராஜன் தலைமை தாங்கினார்.பொதுச்செயலாளர் ஜேக்கப், துணைத் தலைவர்கள் பூவை ராசன், ஸ்டாலின், பாஸ்கர்ராஜ்,வின்சென்ட் மற்றும் பாலசந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் இணை நிறுவனர் மற்றும் டிரஸ்டி சேவியர், ரிப்பன் வெட்டி இலவச தையல் பயிற்சி வகுப்பினை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பழனிச்சாமி பெயர் பலகையைத் திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினார். இந்த நற்பணித் திட்டத்தில் பாலமுருகன் டெக்ஸ் உரிமையாளர் அரிமா அன்பழகன், அன்னைதெரசாபேரவை மாநில துணைத்தலைவர் சிவாஜிநாதன், பாலச்சந்தர், ரெனால்ட் ஜார்ஜ் மற்றும் சொக்கலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பயிற்சியில் இணைய அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் ஆர்வத்துடன் திரண்டு வந்திருந்தனர். விழாவின் ஒரு பகுதியாக, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் வகையில் ஆண்களுக்கு வேஷ்டி-சட்டைகளும், பெண்களுக்குச் சேலைகளும் வழங்கப்பட்டன. பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள இந்த இலவசப் பயிற்சி வகுப்பு அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று உள்ளது.*



Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.